

'இந்தியா' கூட்டணிக் கட்சிகளின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு அவர்கள், 28.3.2024 அன்று மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், மக்கள் நீதி மய்யம் தலைமை நிர்வாகி ஏ.ஜி.மவுரியா (ஐ.பி.எஸ்.ஓய்வு) உடனிருந்தனர்.



'இந்தியா' கூட்டணி சார்பில், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் வெற்றி வேட்பாளர் தொல்.திருமாவளவன் அவர்கள் பேரறிஞர் அண்ணா,அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி தோழமைக் கட்சி நிர்வாகிகளுடன் ஊர்வலமாகச் சென்று அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்நிகழ்வில் கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆ.சங்கர் ஆகியோர் உள்ளனர்.



அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலையில் தொகுதி கழக வேட்பாளர் சி.என். அண்ணாதுரையை ஆதரித்து ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் தொகுதியில் திரண்ட மக்களிடையே வாக்குச் சேகரித்தார்.



கரூர் நாடாளுமன்றத் தொகுதியில் கரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கமேடு பகுதியில் கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, 'இந்தியா' கூட்டணி கரூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் செ.ஜோதி மணியை ஆதரித்து வெள்ளமெனத் திரண்ட கூட்டத்தினர் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

### வேட்பாளர்கள் தொல். திருமாவளவன் - எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

# சிதம்பரம் - கடலூர் தொகுதிகளில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

### கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், மார்ச் 29-

இந்தியா கூட்டணி கட்சிகளின், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன், எம்.பி., அவர்களையும் மற்றும் கடலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர்.எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., அவர்களையும் ஆதரித்து இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி மற்றும் கடலூர் நாடாளுமன்ற தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் செய்ய உள்ளார் என்று மாவட்டக் கழக் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி



வேட்பாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் தொல்.திருமாவளவன், எம்.பி., அவர்களையும் மற்றும் கடலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர்.எம்.கே.விஷ்ணுபிரசாத் எம்.பி., அவர்களையும் ஆதரித்து இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி மற்றும் கடலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்ய உள்ளார்.

30.03.2024 சனிக்கிழமை, மாலை 5.00 மணி - கடலூர் கடை வீதி, விருத்தாசலம்.

30.03.2024 சனிக்கிழமை, இரவு 7.00 மணி - சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் கடை வீதி, நான்கு முனை சந்திப்பு. (அரியலூர், ஜெயங்கொண்டம் வழியாக)

31.03.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணி - சிதம்பரம் தெற்கு ரத வீதி, சிதம்பரம்.

31.03.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 10.30 மணி - கடலூர், கடலூர் சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு.

அதுசமயம், இக்கூட்டத்தில் திமுக மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழகம், கொங்குநாடு மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத்தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி, ஆம்ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக்கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள்,

தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில் நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னே ற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், திமுக மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் முன்னோடிகள், தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## இன்று திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி

### வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு.



தி.மு.க. தலைமையிலான "இந்தியா" கூட்டணி கட்சிகளின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களை ஆதரித்து கழகஇளைஞர் அணி செயலாளர் - இளைஞர்நலன் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பின்வரும் விவரப்படி திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் அடங்கிய கீழ்க்கண்ட இடங்களில் திறந்த வேனில் தேர்தல் பிரச்சாரம் வாக்குகள் சேகரிக்க வருகை தர உள்ளார்.

| 29- 3 - 2024 வெள்ளிக்கிழமை | |
|---|---|
| மாலை 5.00 மணி ஆலந்தூர் தொகுதி | ஆலந்தூர் நீதிமன்றம் ஏதிரில் |
| மாலை 6.00 மணி பல்லாவரம் தொகுதி | சந்தை ரோடு, பல்லாவரம் |
| இரவு 7.00 மணி தாம்பரம் தொகுதி | சண்முகம்ரோடு, தாம்பரம் |
| இரவு 8.00 மணி செங்கல்பட்டு தொகுதி | பாவேந்தர் சாலை, மறைமலைநகர் |

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

### நாடாளுமன்றத் தேர்தல் 2024

## பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்!



2024 ஏப்ரல் - 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை யொட்டி, கழகப் பொதுச் செயலாளரும் நீர் வளத் துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள், 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கீழ்காணும் இடங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|---|
| 04-04-2024 | - | தருமபுரி |
| 05-04-2024 | - | சேலம் |
| 07-04-2024 | - | வந்தவாசி |
| 08-04-2024 | - | வடசென்னை |
| 10 -04-2024 / 12 - 4 - 2024- | - | அரக்கோணம், வேலூர் |

### இந்தியா கூட்டணிக்கு தமிழ்நாடு பதிவு மூப்பு பட்டதாரி மற்றும்

# இடைநிலை ஆசிரியர் சங்கம் ஆதரவு!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியை சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, மார்ச் 29-

நாடாளுமன்றத் தேர்தல் - 2024-இல் 'தமிழ்நாடு பதிவு மூப்பு பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் சங்கம்' மாநில தலைவர் கி.இரத்தினக்குமார் மற்றும் நிர்வாகிகள் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது குறித்த விவரம் வருமாறு:-

'தமிழ்நாடு பதிவு மூப்பு பட்டதாரி மற்றும் இடைநிலை ஆசிரியர் சங்கம்' மாநிலத் தலைவர் கி.இரத்தினக்குமார் மற்றும் நிர்வாகிகள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் சங்க நிர்வாகிகள் பாடுபடுவதோடு, தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் உறுதி அளித்தனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு! திருப்பெரும்புதூர்

# கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு மாங்காட்டில் ஆதரவு திரட்டுகிறார்!

### நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா அறிக்கை!

காஞ்சிபுரம், மார்ச் 29 -

மாங்காடு நகர 'இந்தியா' கூட்டணி சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் மாங்காட்டில் ஊர் சமுதாய பெரியோர்களையும் அனைத்து அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகளையும் சந்தித்து ஆதரவு திரட்டும் நிகழ்ச்சி நாளை நடைபெறுகிறது என நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாங்காடு நகர 'இந்தியா' கூட்டணி சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளு மன்றத் தொகுதி கழக வேட்பாளர் டி. ஆர்.பாலு அவர்கள்' பல்வேறு இயக்க ங்கள், சங்கங்களைச் சார்ந்த நிர்வாகிகளையும், பொறு ப்பாளர்களையும், தோழர்களையும் நேரில் சந்தித்து ஆதரவு திரட்டும் நிகழ்ச்சி நாளை (30.03.2024, சனிக்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் மாங்காடு மெயின் ரோடு, கல்யாணி மண்டபம் எதிரில் அமைந்துள்ள காமாட்சி திருமண மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

இந்நிகழ்வில் குறுசிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்க ள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி .மு.க. செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

எனவே ஊர் சமுதாய பெரியோர்களும், தாங்களும், தங்கள் இயக்க, சங்க நிர்வாகிகளும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு நகரச் செயலாளர் பட்டூர் எஸ். ஜபருல்லா கேட்டுக் கொண்டுள்ளார்.



மத்திய சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் தயாநிதி மாறனை ஆதரித்து மு.க. தமிழரசு அவர்கள் 109 'அ ' வட்டத்தில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். உடன் மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு எம் சி, அன்பகம் கலை, நா.எழிலன் எம் எல் ஏ , பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், கலைக் கதிரவன், ச .டேவிட் இன்பராஜ், இந்தியா கூட்டணி கட்சி தோழர்கள் மாவட்ட ,பகுதி, வட்ட நிர்வாகிகள் கழகத்தினுடைய மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.